செ.கு.எண்: 419 நாள்: 21.11.12

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

## அறிக்கை – 21.11.2012

கடலூர் மாவட்டம், வேப்பூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. S.தனவேல் அவர்கள் 16.11.2012 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை, காவல் துறை இயக்குநர் அலுவலகம், மாநில வாத்தியக் குழுவில், இசைக் குழு காவலராகப் பணி புரிந்து வந்த திரு. ஸ்டான்லி நிர்மல் குமார் அவர்கள் 16.11.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை தலைமைக் காவலர் திரு. தனவேல் மற்றும் இசைக் குழு காவலர் திரு. ஸ்டான்லி நிர்மல் குமார் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான தலைமைக் காவலர் திரு. S.தனவேல் மற்றும் மாரடைப்பால் காலமான இசைக் குழு காவலர் திரு. ஸ்டான்லி நிர்மல் குமார் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9